**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO.245/ 2021**

Deposition of RW - 4 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 16.03.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜனஹர் | Age | : |
| Father's Name | : ராசுபிள்ளை | Village | : |
| Calling | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் காந்திகிராமத்தில் வசிக்கின்றேன். நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 13.08.2020–ம் தேதியன்று பகல் 12.50 மணியளவில் வேலாயுதம்பாளையம் புன்னம்சத்திரம் சாலையில் நான் TN 47 AB 7778 என்ற பதிவெண் கொண்ட காரில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது எதிர் திசையில் வந்த இரு சக்கர வாகனம் TN 29 AX 5655 அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து எனது காரின் வலது முன் பக்கத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது. எனது வாகனத்தின் வலது முன் பக்கம் மற்றும் வலது பக்கம் சேதம் ஏற்பட்டது. நான்தான் ஆம்புலன்ஸ் வரவழைத்து இரு சக்கர வாகனத்தில் வந்து கீழே விழுந்த நபரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். நேராக வேலாயுதம்பாளையம் காவல்நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து நான் புகார் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் கிழக்கு பக்கமாக தென்வடல் சாலையில் சென்று கொண்டிருந்தேன். எதிரில் வந்த இரு சக்கர வாகனம் கிழக்கு நோக்கி என் வாகனத்தின் மீது மோதிவிட்டது. இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபரால்தான் விபத்து ஏற்பட்டது. விபத்து குறித்த வழக்கு இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் மீது பதிவு செய்யப்பட்டது. இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் தலை கவசம் அணியவில்லை.

1 **ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் B.E. M.E படித்துள்ளேன். அரசு ஊழியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கும், போலீசாருக்கும் நெருக்கமான உறவு உண்டு என்றால் அவ்வாறு இல்லை. தொழில் சார்ந்து போலீசாருடன் நெருக்கம் உண்டு என்றால் அவ்வாறு இல்லை. சமரசம் என்பவர் எனது சகோதரர். அவர் இந்த வழக்கின் 1–ம் எதிர்மனுதாரர். நான் ஓட்டி சென்ற வாகனம் அவர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. வழக்கு சம்பந்தமாக எனது சகோதரருக்கு நீதிமன்றத்திலிருந்து நோட்டீஸ் வந்த விவரம் தெரியும். அவர் இந்த வழக்கில் வழக்கறிஞர் மூலம் வழக்கு நடத்தி வருகிறார் என்றால் எனக்கு அது பற்றி தெரியும். எனது சகோதரர் என்னை சாட்சியாக விசாரிக்கவில்லை.

இந்த வழக்கின் காப்பீட்டு நிறுவனம் தொகை செலுத்த வேண்டி வந்தால் அதை எனது சகோதரர்தான் செலுத்தவேண்டும் என்று சொன்னதால்தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் எனது சகோதரர் என்னை சாட்சியாக விசாரித்து இருப்பார் என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்றவுடன் நான் காவல்நிலையம் சென்றுவிட்டேன் என்றால் சரிதான். புகார் நான்தான் எழுதினேன். புகார் வாங்கிய பின்பு உடனடியாக வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் போலீசார் இது வரை இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் விசாரிக்கவில்லை.

இந்த வழக்கின் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டதாக போலீசார் அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. நான்தான் வாகனத்தை அஜாக்கிரதையாக விபத்து ஏற்படுத்தினேன் என்பதால்தான் போலீசார் அவ்வாறுஇறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் தான் எனது காரை அதிவேகமாக, அஜாக்கிரதையாக ஓட்டி வலது பக்கமாக சென்று

மனுதாரர் வாகனத்தின் மோதி விபத்து ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்ற செல்வாக்கையும், அப்போதிருந்த போலீசார் எனக்கு அறிமுகம் ஆனவர்கள் என்பதை பயன்படுத்தி மனுதாரர் மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் என் மீது வழக்கு பதிவு செய்யப்படும் என்பதால் போலீசாருடன் இணைந்து மனுதாரர் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணம் என்னுடைய அதிவேகமும், அஜாக்கிரதையும் காரணம்தான் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |